கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**,** கடலூர்

**O.S.No.446/2010** தேதி**: 23.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (ஆசைத்தம்பி, த/பெ.சிவலிங்கம்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆகியவை இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாதவை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.10 ஆகிய பத்திரத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் சக்குபந்தி உள்ளது.
2. பக்கிரிசாமி பிள்ளையை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்பாசாமி படையாட்சியை தெரியுமா என்றால் எனது பெரியப்பாவின் அப்பா ஆவார். கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கு எந்த பக்கத்தில் அப்பாசாமி படையாட்சி சொத்து உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. வா.த.சா.ஆ.10-க்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.
3. நான் ஏற்கனவே எனது அப்பா தண்டபாணி மூலம் தாக்கல் செய்த வழக்கின் வா.த.சா.ஆ.4- ஆன பிராதில், குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறானது என்றால் தவறுதான். வா.த.சா.ஆ.4-ல் குறிப்பிட்டுள்ள சக்குபந்தியும் தவறு தான் என்றால் அதில் சரியாகத்தான் உள்ளது. இதே சக்குபந்திக்கு தான் தற்போது உள்ள இந்த வழக்கையும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
4. இவ்வழக்கில் கண்டுள்ள 3ம் பிரதிவாதி எழிலரசி யார் என்றால் எனது தம்பியின் மனிவி ஆவார். 4 மற்றும் 5-ம் பிரதிவாதிகள் யார் என்றால் அவரது பிள்ளைகள்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.23 18:27:59 +0530

ஆவார்கள். இவர்களை எனக்கு தெரியுமா என்றால் 2002-லிருந்து தெரியும். கணபதியின் வாரிசுகள் யார் யார் என்று எனக்கு தெரியாது எனவும் அவர்களை அடையாளம்காண நான் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்திற்கு எனக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் பாதி சொத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது மீதி சொத்திற்கு கொடுக்கப்படவில்லை. மீதி சொத்திற்கு ஏன் பட்டா கோரவில்லை என்றால் கூட்டு பட்டாவாக இருப்பதால் அளந்து பிறகு வாங்கிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. யார் யார் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சிவலிங்கம் மற்றும் பாக்கியம் பெயரில் உள்ளது.

6. அந்த பட்டா எப்போது வழங்கப்பட்டது என்றால் 2021-ல் வழங்கப்பட்டது. நான் ஏன் எனது சொத்திற்கான பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு முடிந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன்.

7. வீரப்ப படையாட்சி 07.07.1947-ல் கிரையம் வாங்கிய தேதியிலிருந்து பிரதிவாதியும் அவரது முன்னோர்களும் வழக்கு சொத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பாவடையை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

8. பாவாடையும் வீரப்பனும் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்திற்கு பூர்வீகமாக சொத்து உண்டா என்றால் கிடையாது. வா.த.சா.ஆ.1-ல் ‘‘பாவாடை படையாட்சிக்கு பாக பாத்தியமாய் கிடைத்து அனுபவித்து வருவதும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

9. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.23 18:28:03 +0530

ஆனால் அப்போது நான் ஊரில் இல்லை. பண்ருட்டிக்கும் நல்லாதூருக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 40 கி.மி இருக்கும். நான் ஊரில் இல்லை என்று குறிப்பிடுவது பண்ருட்டியில் இல்லை என்பதை தான் என்றால் சரிதான். ஆகையால் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும் போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்பது எனக்கு நேரடியாகத் தெரியாது சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் சரியானது என்றால் சரிதான்.

10. அந்த அறிக்கைக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை அளித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் 2-ம் பக்கத்தில் “சர்வே எண்.282/5 மற்றும் 282/6 இரண்டு சொத்துக்களும் தெற்கு பார்த்த மனையாகும்” என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் சரிதான். அதில் 3-ம் பக்கத்தில் 7வது வரியில் “மொத்த அளவுகளை சேர்த்தால் 50.92 சதுர மீட்டர் அல்லது 1 1/4 செண்ட் என்று தாலுக்கா நில அளவையர் கணக்கிட்டு சொன்னார் இதனை எனது வரைபடத்தில் ABCD என்று குறியீடு செய்துள்ளேன்” என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் சரிதான்.

11. பூமியில் சொத்து யார் யார் அனுபவத்தில் இருந்ததோ அதன் அடிப்படையில் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு குறைந்த விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டதற்கு இன்றளவும் நான் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதில் பார்த்துக்கொள்ளலாம் என்று ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

12. வழக்கு சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் அனுபவமும் எந்த காலத்திலும்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.02.23 18:28:08 +0530

இருந்தது இல்லை என்றாலும் எனவே எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.23 18:28:12 +0530

***Additional District Munsif , Cuddalore.***